


ஆன்மிக சிகரத்தின்
# நம்ம ஊரு நியூஸ்
RNI No: TNTAM/2017/75122




Editor: V.S.N.Sharma | Chief Reporter : S.Esakki | Chennai : 9710755689 | 9962505384 | 6 பக்கம் | 2.3.2026 திங்கட்கிழமை ★★

## திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில்

# பிரதமர் மோடி சுவாமி தரிசனம்

மதுரை, மார்ச் 2: மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிரதமர் மோடி இன்று மாலை வழிப்பட்டார். அவருக்கு கோயில் நிர்வாகம் சார்பில் பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது.

முருகப் பெருமானின் அறு படை வீடுகளில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம், மிகவும் பிரசித்திப்பெற்ற ஆன்மீக ஸ்தலமாக திகழ்கிறது. இந்த கோயிலின் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கடந்தாண்டு திருக்கார்த்திகை நாளில் தீபம் ஏற்ற அனுமதி வழங்கக்கோரி மதுரை எழுமலையைச் சேர்ந்த ராம ரவிக்குமார் உட்பட பலர் உயர் நீதிமன்றம் மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், திருக்கார்த்திகை நாளில் தீபத் தூணிலும் தீபம் ஏற்ற வேண்டும் என உத்தரவிட்டார். இந்த உத்தரவு நிறைவேற்றப்படவில்லை. இதையடுத்து மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகர காவல் ஆணையர், கோயில் செயல் அலுவலர் உள்ளிட்டோர் மீது நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு கார்த்திகை நாளுக்கு மறு நாள் விசாரணைக்கு வந்தபோது மத்திய தொழிலக பாதுகாப்பு படை வீரர்களுடன் சென்று மனுதாரர்களே தீபம் ஏற்றலாம் என நீதிபதி உத்தரவிட்டார். இந்த உத்தரவுபடி மத்திய தொழிலக பாதுகாப்பு படை வீரர்களுடன் தீபம் ஏற்றச் சென்ற மனுதாரர்களை 144 தடை உத்தரவு அமலில் இருப்பதாக கூறி போலீஸார் தடுத்து நிறுத்தினர்.

திருப்பரங்குன்றம் விவகாரம் நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது. நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யக் கோரி திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் இம்பீச்மென்ட் தீர்மானம் நிறைவேற்ற சபாநாயகரிடம் மனு அளித்தன. இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்கட்சி எம்பிக்களும், பாஜக எம்பிக்களும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்த சூழலில் மதுரை கரிமேடு பகுதியைச் சேர்ந்த பூர்ணசந்திரன்



என்பவர் திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றக்கோரி மதுரை அவுட்போஸ்ட் அருகே பெரியார் சிலை முன்பு தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவத்தால் திருப்பரங்குன்றம் தீப விவகாரம் நாடு முழுவதும் பேசு பொருளாக மாரியது. தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு, திருப்பரங்குன்றம் மலையில் இருப்பது தீபத்தூண் தான். ஒவ்வொரு ஆண்டும் திருக்கார்த்திகை நாளில் அந்த தூணிலும் தீபம் ஏற்ற வேண்டும் என உத்தரவிட்டது. இதை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது.

இந்நிலையில் விரைவில் தமிழக சட்டமன்றத்துக்கு தேர்தல் நடைபெற உள்ள நிலையிலும், திருப்பரங்குன்றம் விவகாரத்தின் பரபரப்புக்கு இடையேயும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரை வந்த பிரதமர் மோடி, இன்று மாலை 4.10 மணியளவில் திருப்பரங்குன்றம் கோயிலுக்கு சாலைமார்க்கமாகச் சென்றார்.

பிரதமரின் வருகையை முன்னிட்டு கோயில், மலைப்பகுதியில் 1,500க்கும் மேற்பட்ட போலீஸார், 5 அடுக்கு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கோயில் முன் காரில் நின்றபடியே பிரமதர் மோடி, 150 மீ தொலைவில் பெரிய தேர் வீதியில் திரண்டிருந்த பொதுமக்களை பார்த்து கை அசைத்தும், வணங்கியும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

பொதுமக்கள், மோடி வாழ்க, என்று முழக்கங்களும், ஆரவாரமும் செய்தனர். கோயில் வாசல் முதல் மூலஸ்தானம் வரை சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. கோயில் மண்டபத்தில் நுழைந்தவுடன் அச்சகர்கள், பூரண கும்ப மரியாதை வழங்கினர். அதன் பிறகு மேளதாளங்கள் முழங்க, பிரதமர் மண்டபத்தில் இருந்து கோயிலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்.

குடவரை கோயில் பிரகாரத்தை சுற்றிச் சென்ற பிரதமர் மோடி, மூலஸ்தானத்தில் உள்ள சுப்பிரமணிய சுவாமி சன்னதியில் நின்றபடி சிறிது நேரம் உருக்கமாக வழிப்பட்டார். சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. கொடிமரத்திற்கு முன் சாஷ்சடங்கமாக தரையில் விழுந்து முருகனை மனமுருகி வழிப்பட்டார்.

அர்ச்சகர்கள், பிரசாதம் வழங்கி முருகன் படம் வழங்கினார். 4.30 மணியளவில் மீண்டும் திருப்பரங்குன்றத்தில் இருந்து ஏர் போர்ட் மண்டலே நகரில் நடந்த பொதுக்கூட்டத்துக்கு பிரதமர் புறப்பட்டுச் சென்றார்.

கடந்த 2024 மக்களவைத்தேர்தல், 2021ம் ஆண்டு சட்டசபை தேர்தல் நேரத்தில் இதுபோல் பொதுக் கூட்டத்திற்கு மதுரை வந்திருந்த பிரதமர் மோடி, மீனாட்சியம்மன் கோயிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்திருந்தார். பிரதமர் வருகையை முன்னிட்டு கோயிலை சுற்றியுள்ள கடைகள் பாதுகாப்பு கருதி நேற்று மதியத்திற்கு பிறகு அடைக்கப்பட்டிருந்தன. மதியம் 12 மணிக்கு கோயில் நடை சாத்தப்பட்டு பிரமர் மோடி சுவாமி தரிசனம் முடிந்து சென்றபின்னரே பக்தர்கள் சுவாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.



# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் மாசித் திருவிழாவில் இன்று தேரோட்டம்!

திருச்செந்தூர்,மார்ச் 2: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் மாசித் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று (மார்ச் 2) திங்கள்கிழமை நடைபெறுகிறது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மாசித் திருவிழா கடந்த பிப்ரவரி 21-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் 8-ஆம் நாளான சனிக்கிழமை காலை, சுவாமி சண்முகர் வெள்ளைச் சாத்தி பெரிய வெள்ளிச் சப்பரத்தில் எழுந்தருளி வீதியுலா வந்து மேலக்கோயில் சேர்ந்தார். அதனைத் தொடர்ந்து, முற்பகலில் பச்சை சாத்தி, பச்சைக் கடைசல் சப்பரத்தில் எழுந்தருளி வீதியுலா வந்த சுவாமி, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீண்டும் கோயிலைச் சேர்ந்தார்.

தொடர்ந்து, சுவாமி குமரவிடங்கப் பெருமானும், சுவாமி அலைவாயுகந்த பெருமானும் தனித்தனி வெள்ளிக் குதிரை வாகனங்களில் எழுந்தருளி, பாளையங்கோட்டை சாலையில் உள்ள வேட்டை வெளி மண்டபத்தில் திருக்கண் சாத்தி, வீதியுலா வந்து மேலக்கோயில் சேர்கின்றனர். அதன்பின்னர், சுவாமி குமரவிடங்கப் பெருமானும், தெய்வானை அம்மனும் பகலில் தனித்தனி பல்லக்கிலும், இரவில் சுவாமி தங்க கயிலாய பர்வத வாகனத்திலும், அம்மன் வெள்ளிக் கமல வாகனத்திலும் வீதியுலா வருகின்றனர். விழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் நாளை (மார்ச் 2) காலை 7 மணிக்குத் தொடங்குகிறது. இதையொட்டி, திருச்செந்தூரில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்து வருகின்றனர்.



## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்:

# அமைச்சர் பி.கீதா ஜீவன் நேரில் வாழ்த்து

சென்னை, மார்ச் 2: தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு அமைச்சர் பி.கீதா ஜீவன் நேரில் சந்தித்து அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

தமிழக முதலமைச்சர் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் திமுகவினர் உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, இன்று சென்னையில் முதலமைச்சரை நேரில் சந்தித்த சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முதல்வரின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. அப்போது அமைச்சருடன் முக்கிய கட்சி நிர்வாகிகளும் உடனிருந்தனர். தமிழக அரசின் சாதனைத் திட்டங்கள் மற்றும் மகளிர் நல மேம்பாட்டிற்காக முதல்வர் எடுத்துவரும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், அமைச்சர் அவருக்கு மலர்க்கொத்து மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

அமைச்சரின் சொந்த மாவட்டமான தூத்துக்குடியிலும் முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்குதல், இனிப்பு வழங்குதல் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் போன்ற ஆக்கப்பூர்வமான பணிகளில் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் திரைப்பிரபலங்கள் எனப் பலரும் சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் நேர்முகமாகவும் தங்களது வாழ்த்துகளைப் பதிவு செய்து வருகின்றனர்.




# தூத்துக்குடியில் தாய்கிழவி திரைப்படம் பார்த்த நடிகை ராதிகா: ரசிகர்கள் உற்சாக வரவேற்பு!



தூத்துக்குடி, மார்ச் 2: பிரபல நடிகை ராதிகா சரத்குமார் நடிப்பில் வெளியாகி மக்களிடையே வரவேற்பைப் பெற்று வரும் 'தாய்கிழவி' திரைப்படத்தைத் தூத்துக்குடியில் உள்ள கே.எஸ்.பி.எஸ் திரையரங்கில் அவரே நேரில் கண்டு ரசித்தார்.

திரையரங்கிற்கு வந்த நடிகை ராதிகா மற்றும் படக் குழுவினரை திரையரங்க நிர்வாகத்தினர் மற்றும் ரசிகர்கள் மலர்க்கொத்து கொடுத்தும் சால்வை அணிவித்தும் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். படம் பார்க்க வந்திருந்த ரசிகர்களுடன் அவர் சிறிது நேரம் கலந்துரையாடினார். தங்களின் அன்பிற்குரிய நடிகையைத் திரையரங்கில் நேரில் பார்த்த ரசிகர்கள், அவருடன் செல்பி எடுத்துக்கொண்டு மகிழ்ந்தனர். இச்சம்பவம் தூத்துக்குடி சினிமா ரசிகர்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை அறிவாலயத்தில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட பிரதிநிதி மதன்ராஜ் தலைமையில் கட்சி , தொண்டர்கள் செந்தில் மாடசாமி அம்பி பாபு சிங் ஆகியோர் புத்தகங்களை பிறந்தநாள் பரிசாக வழங்க அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சரை சந்திக்க சென்றபோது எடுத்தபடம்.

### தமிழக வட மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில்

# மார்ச் முதல் மே வரை வெப்ப அலை அதிகரிக்கும்

## வானிலை ஆய்வு மையம்

சென்னை, மார்ச் 2: தமிழக வட மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் மார்ச் முதல் மே மாதம் வரை வெப்ப அலை அதிகரிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மார்ச் முதல் மே மாதம் வரையிலான வெப்பநிலை மற்றும் மழை தொடர்பான வானிலை கணிப்பை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

தென்கிழக்கு தீபகற்பத்தின் (வட தமிழகம், கடலோர தமிழகம்) பல பகுதிகளிலும், வடமேற்கு மற்றும் மேற்கு மத்திய இந்தியாவின் சில பகுதிகளிலும் மார்ச் முதல் மே 2026 வரையிலான காலகட்டத்தில் இயல்பை விட அதிகமான வெப்ப அலை நாட்கள் இருக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக அதிகபட்சமாக 15 நாட்கள் வரை வழக்கத்தை விட அதிகமான வெப்ப அலை நாட்கள் நிலவ வாய்ப்புள்ளது. எனவே இந்த காலகட்டத்தில் போதுமான நீரை அருந்த வேண்டும். அதிக வெயில் இருக்கும் நேரத்தில் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். வெப்ப அலையில் எளிதில் பாதிக்கப்படும் மக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அவர்களை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மழை வாய்ப்பு குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: குமரிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. குமரிக்கடல் பகுதிகளிலிருந்து லட்சத்தீவு பகுதிகள் வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக மார்ச் 2, நாளை மறுதினமும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 4-ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 5, 6 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், 7-ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழக உள் மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள், தமிழக கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# முதல்வர் ஸ்டாலினின் பிறந்த நாளுக்கு பிரதமர் மோடி வாழ்த்து



சென்னை, மார்ச் 2: முதல்வர் மு.க. ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். தமிழகம் வந்துள்ள பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். மேலும் அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு பிறந்த நாள் நல்வாழ்த்துகள். அவர் நீண்ட ஆயுளோடும் நல்ல ஆரோக்கியத்தோடும் வாழ வாழ்த்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

பிரதமரின் வாழ்த்துக்கு முதல்வர் தனது சமூக ஊடக பதிவில் நன்றி தெரிவித்துள்ளார். மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்ட வாழ்த்துப் பதிவில், "தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு இனிய பிறந்த நாள் நல் வாழ்த்துகள். நீண்ட ஆயுளோடும் ஆரோக்கியத்தோடும் வாழ் வாழ்த்துகள்" என குறிப்பிட்டுள்ளார். கேரள முதல்வர் பினராயி விஜயன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, காங்கிரஸ் தலைவர் கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, ஆந்திர முன் னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி, பாமக தலைவர் அன்புமணி, தேமுதிக தலைவர் பிரேமலதா, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், நடிகர் ரஜினிகாந்த் உள்ளிட்டோர் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# தென் மாவட்ட மக்கள் அதிமுக ஆட்சி அமைக்க துணை நிற்பார்கள்

## பழனிசாமி நம்பிக்கை



மதுரை, மார்ச் 2: "தேசிய ஜனநாயக கூட்டணி அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற் பார்கள்" என்று அதிமுக பொதுச்செயலாளர் கே.பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மதுரை தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் கே.பழனிசாமி பேசியதாவது: திமுக கூட்டணியில் இன்னும் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கவில்லை. ஆனால், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் பிரச்சாரத்தை தொடங்கி, இரண்டாவது பொதுக்கூட்டம் மதுரையில் நடைபெறுகிறது.

இந்திய நாடே தற்போது தமிழக சட்டப்பேரவை தேர்தலில் யார் வெற்றிப் பெற போகிறார்கள் என்று உற்றுநோக்கி பார்த்து வருகிறது. மக்கள் விரோத ஆட்சியை அகற்றவே தேசிய ஜனநாயக கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. எங்கள் கூட்டணியில் மக்கள் செல்வாக்கு பெற்ற கட்சிகள் இணைந்துள்ளன. எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு தென் மாவட்ட மக்கள் பக்கபலமாக இருந்தனர்.

எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கியபோது திண்டுக்கல் மக்களவைத் தேர்தலில் வெற்றியை கொடுத்து தென் மாவட்ட மக்கள் ஆதரித்தனர். அது போல், வரும் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியை அதிக தொகுதிகளில் வெற்றிபெறச் செய்து அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்.

அதிமுகவை பொறுத்தவரையில் அது சாதி, மதத்திற்கு அப்பாற்பட்ட கட்சி. பல்வேறு சோதனைகளை கண்ட கட்சி. 31 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்த கட்சி. பொன்விழா கண்ட கட்சி. தமிழகம் இந்தளவுக்கு வளர்ந்துள்ளதற்கு எங்கள் அதிமுக தலைவர்கள் தமிழகத்திற்கு பல்வேறு திட்டங்களை கொண்டு வந்ததே முக்கிய காரணம்.

பிரதமர் மோடி உலக நாடுகளே பொறாமைப்படும் அளவிற்கு இந்திய நாட்டை ஆட்சி செய்கிறார். முதல்வர் ஸ்டாலின் அடிக்கடி மத்திய ஆட்சியர்கள், எந்த வளர்ச்சியும், நிதியையும் தமிழகத்திற்கு கொடுக்கவில்லை என்று அவதூறுகளை பரப்பி வருகிறார். இன்று இந்த மேடைக்கு வருவதற்கு முன் கூட அரசு விழாவில் தமிழகத்திற்கு ரூ.4,500 கோடி வளர்ச்சி திட்டங்களுக்கு கொடுத்து விட்டுதான் வந்துள்ளார்.

ஒவ்வொரு முறையும் தமிழகம் வரும்போது ஆயிரக் கணக்கான கோடி ரூபாயை தமிழகத்திற்கு பிரமர் மோடி வாரி வழங்கி வருகிறார். ஆனால், திமுக கூட்டணி கட்சியினர் செய்த சாதனைகளை சொல்வதற்கு எதுவும் இல்லாமல் மத்திய அரசு மீது திட்டமிட்டு அவதூறு செய்திகளை பரப்பி வெற்றிபெற பார்க்கிறார்கள்.

திமுகவுக்கு குடும்ப நலன் மட்டுமே அக்கட்சியின் நிலைபாடாக உள்ளது. காற்று கண்ணுக்கு தெரியாது. ஆனால், அந்த காற்றில் கூட ஊழல் செய்த ஒரே கட்சி திமுக. 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் செய்தனர். திமுக விஞ்ஞான முறையில் ஊழல் செய்த கட்சி என்று சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

ஊழலுக்காக கலைக்கப்பட்ட ஒரே ஆட்சி திமுக ஆட்சிதான். ஊழல் நிறைந்த திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும். தென் மாவட்டங்களுக்கு அதிமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. 11 அரசு மருத்துவக்கல்லூரிகள் அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. திமுக ஆட்சியில் ஒரு மருத்துவக்கல்லூரியைக் கூட பெற முடியவில்லை. பாம்பன் ரயில்வே பாலத்தை பிரதமர் கட்டி கொடுத்துள்ளார்.

ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோதுதான் 'எய்ம்ஸ்' மருத்துவமனை மதுரைக்கு கொண்டு வரப்பட்டது. தற்போது இந்த மருத்துவமனைப் பணிகள் நடந்து வருகின்றன. அந்த மருத்துவமனையை வர விடாமல் திமுக தடுக்க பார்த்தது. மதுரை விமானநிலையம் விரிவாக்கம் செய்வதற்கு அதிமுக ஆட்சியில் 'அன்டர் பாஸ்' முறையில் பல்வேறு முயற்சிகளைச் செய்தோம். தற்போது இந்த திட்டத்தையும் திமுக அரசு முடக்கி வைத்துள்ளது. ஐந்து ஆண்டு கால ஆட்சியில் மதுரை விமானநிலையம் விரிவாக்கத்திற்கு திமுக ஆட்சியில் எந்த முயற்சியும் நடக்கவில்லை.

இவ்வாறு அவர் பேசினார்.






# பெரம்பலூரில் 10வது பெரம்பலூர் புத்தகத்திருவிழா



பெரம்பலூர், மார்ச் 2: பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், மக்கள் பண்பாட்டு மன்றம் மற்றும் தென்னிந்திய புத்தக பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இணைந்து பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள திடலில் 10வது பெரம்பலூர் புத்தகத் திருவிழா 27.02.2026 அன்று கோலாகலமாகத் தொடங்கியது.

மூன்றாம் நாளான நேற்று (01.03.2026) நிகழ்ச்சிகளை தனலட்சுமி சீனிவாசன் பல் கலைக்கழக நிறுவனத்தினர் ஒருங்கிணைப்புப் செய்தனர்.

இன்றைய நிகழ்ச்சியில் தேசாந்திரி எஸ்.ராமகிருஷ்ணன் அவர்கள் "புத்தகங்களின் பயணம்" என்ற தலைப்பிலும், கவிஞர் கலைமாமணி நெல்லை ஜெயந்தா அவர்கள் "கை நிறைய கவிதைகள்" என்ற தலைப்பிலும், பிக்பாஸ் புகழ் மஞ்சரி நாராயணன் அவர்கள் "கற்பவை கற்ற பின்" என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்கினார்கள். ஏராளமான பொதுமக்களும், மாணவ மாணவிகளும் வருகை தந்து புத்தக அரங்குகளைப் பார்வையிட்டு, சிந்தனை அரங்கின் நிகழ்ச்சிகளை பார்வையிட்டு கேட்டு மகிழ்ந்தனர்.

நான்காம் நாளான 02.03.2026 அன்று பேராசிரியர், முனைவர் பர்வீன் சுல்தானா அவர்கள் "சொல்லே மந்திரம்" என்ற தலைப்பிலும், சூழலியல் அறிஞர் கோவை சதாசிவம் அவர்கள் "எறும்புகளின் வரிசை கலைகிறது" என்ற தலைப்பிலும், திரு. ராஜம் எம்.பி.நாதன் அவர்கள் "மாபெரும் சபைதனில்" என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்கவுள்ளார்கள்.

100 அரங்குகளில், 10,000 தலைப்புகளில் 1லட்சம் புத்தகங்களுடன் நடைபெறும் புத்தகத்திருவிழாவில் அனைத்து புத்தகங்களுக்கும் விலையில் 10% சிறப்பு தள்ளுபடி வழங்கப்படும். தினந்தோறும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.









# பெரியார், அண்ணா, கருணாநிதி காட்டிய பாதையில் பயணித்து வெல்வோம் ஒன்றாக: ஸ்டாலின் சூளுரை

சென்னை, மார்ச் 2: பெரியார், அண்ணா, கருணாநிதி நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் எனப் போர்க் குணத்தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக! என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.



தனது 73வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "தமிழும் தமிழ்நாடும் நம் உயிர்! அவற்றைக் காப்பது நம் கடமை!.

உழைப்பைத் தவிர வேறொன்று அறியேன் எனச் சொல்லி, இளமை முதல் 73ம் வயது காணும் இந்நாள் வரையில், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பணியாற்றுவதே என் வாழ்நாள் கடமை எனச் செயலாற்றி வருகிறேன். தமிழும் தமிழ் நாடும் தலை நிமிர்ந்த வரலாற்றில் நான் சிறு தொண்டனாய் இருந்தாலும், கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம் பெருந்தொண்டாற்றிடவே நினைக்கிறேன்.

அந்த உறுதியோடு தான், "Dravidian Model-ல் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி, முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். உலகம் திரும்பிப் பார்க்கும் வகையில், இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியிருக்கிறேன். கோடிக் கணக்கான தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் போய்ச் சேர்ந்துள்ளது திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களும், சாதனை களும்!

தனிக்குணம் கொண்ட தமிழர் தலை நிமிர்ந்து வாழ்கின்றனர்; நாட்டிற்கே புத்தொளியை வழங்குகின்றனர் என்று புகழும் வகையில் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது! நம் தமிழினத்தின் லட்சியப் பயணத்தில், நம் கால்கள் பாதை மாறக் கூடாது; நம் தலை யாரிடமும் எதற்காகவும் தாழக் கூடாது! சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அறிவுத் திறத்தால் - நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடித்திட வேண்டும். இதற்காக என்னை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்வேன். இதுவே என் பிறந்தநாள் உறுதிமொழி! பெரியார் - அண்ணா - கருணாநிதி ஆகியோர் நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ் நாடு வெல்லும் எனப் போர்க் குணத்தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக!"என்று தெரிவித்துள்ளார்.




# காரமடை ரங்கநாதர் கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்து மாற்றம்

கோவை, மார்ச் 2: காரமடை ரங்கநாதர் கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் காரமடை அருள்மிகு ரங்கநாதர் திருக்கோவிலுக், காரமடை ஆண்டு தோறும் நடைபெறும் தேர்திருவிழா ,இன்று (02.03.2026) நடைபெற உள்ளது.



திருவிழாவை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதால், பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் கோவை மாவட்ட காவல் துறை சார்பில் சிறப்பு பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து மாற்றங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி மேட்டுப் பாளையத்தில் இருந்து கோவை நோக்கி செல்லும் இலகுரக வாகனங்கள் மேட்டுப்பாளையம் காந்தி நகர் ஜங்ஷன் சின்னத் தொட்டிபாளையம் பெள்ளாதி கண்ணார் பாளையம் 4 ரோடு ஜங்ஷன் - கோட்டை பிரிவு ஜங்ஷன் -வழியாக கோவை செல்ல வேண்டும். கனரக வாகனங்கள். மேட்டுப்பாளையம் தென் திருப்பதி நால்ரோடு அன்னூர் கோவில்பாளையம் -வழியாக கோவை செல்ல வேண்டும்.

கோவையில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வாகனங்கள்.

பெரியநாயக்கன் பாளையம் பெட்டதாபுரம் திம்மம்பாளையம் மங்களக் கரை புதூர் -டீச்சர்ஸ் காலனி பாலம் வழியாக மேட்டுப் பாளையம் செல்ல வேண்டும்.

திருவிழாவிற்கான வாகன நிறுத்தம் காவல்துறை குறிப்பிட்ட இடங்களில் மட் டுமே நிறுத்த வேண்டும். அனுமதியில்லாமல் சாலையோரங்களில் வாகனங்களை நிறுத்தினால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப் படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பு ஏற் பாடுகளாகப்தி ருவிழாவை முன்னிட்டு போதிய அளவில் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் ரோந்து பணிகள் மூலம் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் பொதுமக்கள் காவல்துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்கி, அறிவுறுத்தப்பட்ட வழித்தடங்களைப் பின்பற்றி பயணிக்குமாறு கோவை மாவட்ட காவல்துறை சார்பாக கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.






# திமுகவில் மோசடி செய்வதில் அமைச்சர்களிடம் போட்டா போட்டி

## மதுரையில் பிரதமர் மோடி பேச்சு

மதுரை, மார்ச் 2: "பொதுவாக நன்றாக பணிபுரிவதில் அமைச்சர்களிடம் ஆரோக்கியமான போட்டி இருக்கும். திமுகவில் மோசடி செய்வதில் அமைச்சர்களிடம் போட்டா போட்டி உள்ளது. பணியிடமாற்றம், அரசுப்பணி, அரசு ஒப்பந்தங்கள், மணல் திருட்டு என ரூ.40 ஆயிரம் கோடி அளவுக்கு ஊழல் நடந்துள்ளது. இந்த ஊழல் அரசு மேலும் தொடர்வதற்கு தார்மீக உரிமையில்லை" என மதுரையில் பிரதமர் மோடி பேசினார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளின் 2வது தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் மதுரை மண்டேலா நகரில் இன்று நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி பேசியதாவது: இது பாண்டிய நாடு. வீரம் விளையும் பூமி. இந்த மகத்தான பூமியிலிருந்து பசும்பொன் முத்துராமலிங்க தேவர், மாவீரன் அழகுமுத்து கோன், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், இமானுவேல் சேகரனார் பங்களிப்பை நினைவு கூறுகிறேன்.

இங்கு வருவதற்கு முன்பு திருப்பரங்குன்றம் சென்று முருகனை தரிசனம் செய்து வந்தேன். தமிழ்நாட்டின் நலனுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் வேண்டினேன்.

அதே நேரத்தில் என் இதயம் பூர்ணசந்திரன் என்ற இளம் பக்தரின் உயிர்த் தியாகத்தை நினைத்து வருந்தியது. அவரது மனைவி, 2 மகன்களைச் சந்தித்தேன். அவர்களிடம் என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தேன். அவரின் ஆன்மா அமைதியடைய என் உருக்கமான பிரார்த்தனையை முருகனின் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன். இந்த சம்பவம் திமுக அரசின் நியாயமற்ற செயல்பாட்டால் நடந்திருக்கிறது. இது வலியை ஏற்படுத்துகிறது. இறுதியில் வாய்மை வெல்லும், முருகனின் பக்தர்கள் வெல்வார்கள்.





தமிழ்நாட்டில் சிலர் மீண்டும் ஆட்சியை பிடிக்கலாம் என்ற கனவில் உள்ளனர். இந்த கூட்டத்தை பார்த்த பிறகு அந்த கனவு கற்பனையாகவும், கானல் நீராகவும் மாறிவிடும். தமிழகத்திலிருந்து திமுக வெளியேற்றப்பட வேண்டும் என்பதை மக்கள் தீர்மானித்து விட்டார்கள். தேசிய ஜனநாயக கூட்டணியால் மாற்றத்தை கொண்டுவர முடியும் என்பதை மக்கள் உணர்ந்துவிட்டனர். தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும் என்பது உங்கள் கண்களில் தெரிகிறது.

தமிழக மக்கள் 25 ஆண்டுகளுக்குப் பிறகு 2021ல் திமுகவுக்கு பெரும்பான்மை பலத்தை கொடுத்தனர். இருப்பினும் அவர்களால் நல்ல ஆட்சியை தர முடியவில்லை. மாநிலத்தை கொள்ளையடித்தனர். பரம்பரை ஆட்சியை முன்னெடுக்கின்றனர். மக்களின் எதிர்பார்ப்புகளை மண்ணோடு மண்ணாக்க பார்க்கிறார்கள்.

மதுரை எம்ஜியாருக்கு உறுதுணையாக நின்ற மாநகரம். இதனால் மதுரை என்றால திமுகவுக்கு வேப்பங்காயாக கசக்கிறது. மதுரையில் திமுக கொள்ளை கூட்ட அரசியலை அறிமுகம் செய்தது. மோசமான சலைகள், கேவலமான கழிவுநீர் வாய்க்கால்களை அளித்தனர். சுகாதாரம், தூய்மையை தரைமட்ட அளவுக்கு கொண்டுச் சென்றனர். ஊழல் காரணமாக மதுரை மேயர், பதவியை ராஜினமா செய்தார். பணம் நமக்கு, பிரச்சினைகள் மக் களுக்கு என்பதே திமுகவின் மாடல்.

திமுகவினர் அவர்களாகவும் பணியாற்ற மாட்டார்கள், மற்றவர்களையும் பணியாற்ற விட மாட்டார்கள். பிரதமர் வீட்டு வசதி திட்டத்தில் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டன. அதில் 3 லட்சம் வீடுகள் இன்னும் முடிக்கப்படாமல் உள்ளன. திமுக அரசு கள ஆய்வுகளை இன்னும் முடிக்காமல் உள்ளது. திமுகவின் சில்லறைத்தனமான அரசியலுக்கு ஏழை மக்கள் ஏன் அவதிப்பட வேண்டும்?

தமிழகத்தில் கடந்த 12 ஆண்டுகளில் சுமார் ரூ.12 ஆயிரம் கோடி மதிப்பில் 74 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள், புதிய பொருளாதார வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் உரிமைகளுக்காக வாய்கிழிய பேசும் திமுக, மத்திய ஆட்சியில் இடம் பெற்றிருந்தபோது ஒன்றுமே செய்யவில்லை.

பாம்பன் பாலம் நூறு ஆண்டுகள் இருந்தது. பழமை காரணமாக அதை மாற்றியிருக்க வேண்டும். 2004 முதல் 2014 வரை திமுக - காங்கிரஸ் அரசு என்ன செய்து கொண்டிருந்தது? பாலத்தை ரயில்கள் மெதுவாக கடக்க வேண்டியதிருந்தது. மத்திய அரசு அதை விட மெதுவாக கடந்தது. பாஜக அரசு தான் பாம்பனில் நவீன தூக்கு பாலத்தை கட்டி திறந்தது. நாங்கள் வேலையில் வேகம் காட்டினோம். இதனால் பாலத்தை ரயில்கள் வேகமாக கடக்கின்றன.

தமிழ்நாட்டில் பெண்கள் பெரும் பிரச்சினையில் சிக்கியுள்ளனர். குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. ஒவ்வொரு நாளும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. போதை மாபியாக்கள் மற்றும் மதுவால் குடும்பங்கள் பாதிக்கப்படுவதை பெண்கள் கவனிக்கின்றனர். ஜெயலலிதா ஆட்சியில் பெண்களின் வாழ்க்கை எவ்வளவு சிறப்பாக இருந்தது என்பதை பெண்கள் இப்போது நினைத்து பார்க்கின்றனர்.

தமிழக பெண்கள் அனைவருக்கும் நான் உறுதியளிக்கிறேன். தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு வந்தவுடன் சட்டம் ஒழுங்கில் கவனம் செலுத்துவோம். குற்றவாளிகள், போதை மாபியாக்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். தேசிய ஜனநாயக் கூட்டணி அரசு பெண்களின் பாதுகாப்பு, கண்ணியம், அதிகார பரவலாக்கத்தை உறுதி செய்யும்.

அரசியலில் நேர்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் காமராஜர். திமுக அவருக்கு எதிர்மாறாக உள்ளது. பணியிட மாற்றம், அரசுப்பணி, ஒப்பந்தங்கள், மணல் திருட்டு என ரூ.40 ஆயிரம் கோடி அளவுக்கு ஊழல் நடந்துள்ளது.

பொதுவாக நன்றாக பணிபுரிவதில் அமைச்சர்களிடம் ஆரோக்கியமான போட்டி இருக்கும். திமுகவில் மோசடி செய்வதில் அமைச்சர்களிடம் போட்டா போட்டி உள்ளது. ஏழைகள், இளைஞர்கள், விவசாயிகளிடம் இருந்து திருடுகின்றனர். இப்படிப்பட்ட ஊழல் அரசு மேலும் தொடர தார்மீக உரிமையில்லை. இதனால் தமிழக மக்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசை கொண்டு வர தீர்மானித்துள்ளனர். தேசிய ஜனநாயக கூட்டணி தூய்மையான, திறமையான அரசை அளிக்கும்.

காங்கிரஸ் கட்சியை ஆட்சியிலிருந்து 60 ஆண்டுக்கு முன்பே நீக்கிய மாநிலம் தமிழ்நாடு. இதனால் தான் கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்து தமிழக மக்களை காங்கிரஸ் அரசு வஞ்சம் தீர்த்தது. அப்போது திமுக வாய்மூடி மவுனியாக இருந்தது. மத்திய காங்கிரஸ் அரசுக்கு திமுக ஆதரவு அளித்த போது ஜல்லிக்கட்டை தடை செய்தார்கள். பாஜக அரசு தான் ஜல்லிக்கட்டை மீண்டும் கொண்டு வந்தது. நாடாளுமன்றத்தில் செங்கோலை வைத்து தமிழுக்கு மரியாதை அளித்தோம்.

அண்மையில் இந்தியா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக ஒப்பந்தத்தை செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தால் 28 முன்னேறிய நாடுகளுடன் நாம் இணைந்துள்ளோம். இதனால் இளைஞர்கள், பணியாளர்கள், விவசாயிகள், தொழில் முனைவோர்களுக்கு பொன்னான வாய்ப்புகள் கிடைக்கும்.

தமிழ்நாட்டில் ஜவுளி, மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, காடல்சார் உணவுப் பொருட்கள், சிறு, குறு, மத்திய தொழில் துறைக்கு உலகளாவிய சந்தைகள் கிடைக்கும். தமிழக இளைஞர்களுக்கு பல லட்சம் வேலை வாய்ப்புகள் கிடைக்கும். உலகளவில் போட்டியிட்டு வெற்றி பெறும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இவை எல்லாம் கிடைக்க வேண்டும் என்றால் உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒரு அரசு இருக்க வேண்டும். அது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசால் மட்டுமே முடியும். தேசிய ஜனநாயக் கூட்டணி அரசால் மட்டுமே நிலையான, மக்களை மையமாக கொண்ட அரசை அளிக்க முடியும். தமிழ்நாட்டின் வளர்ச்சியை, இந்தியாவின் வளர்ச்சியை நாங்கள் உறுதி செய்வோம். இவ்வாறு அவர் பேசினார்.




